DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC.197 of 2015

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 1

Name : திரு. மயில்வாகனன்

Age : 55

Father's/Husband's Name : அழகர்சாமி

Village : பல்லடம்

Taluk : பல்லடம்

Occupation : டிவி மெக்கானிக்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of January 2021

முதல் விசாரணை: நாள்.04.01.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டிவி மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.07.2014 தேதி இரவு தூங்கிக்கொண்டிருந்தோம். அடுத்த நாள் காலை எழுந்து பார்த்தபோது எங்களை வீட்டினுள் அடைத்து வெளிபுறமாக யாரோ தாழிட்டு சென்றிருந்தார்கள். என்ன நடந்தது என்று பார்த்தபோது 3 செல்போன்கள் பீரோவில் வைத்திருந்த பணம் ரூ.6 ஆயிரம் ஆகியவை திருடுபோயிருந்தது. நாங்கள் சத்தம் போட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து எங்கள் வீட்டை திறந்துவிட்டார்கள். அதன்பின்னிட்டு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் சொல்ல, சொல்ல காவல்நிலையத்தில் உள்ள ஏட்டையா எழுதிக்கொண்டார். அதிலுள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. அந்த புகார் அ.சா.ஆ.1., போலீசார் இதுகுறித்து விசாரித்தார்கள். பின்னிட்டு 2 மாதம் கழித்து

காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்து என் வீட்டில் திருடுபோன செல்போன் மூன்றும் கிடைத்துவிட்டதாகவும், அவற்றை நீதிமன்றத்தில் பெற்றுசெல்லுமாறும் கூறினார்கள். ஆனால் இன்றுவரை நான் மேற்படி என் வீட்டிலிருந்து களவுபோன செல்போன்களை பெற்றுச்செல்லவில்லை. படிவம் 91 ல் உள்ள வழக்கு சொத்துக்களானது தலைமைக்காவலர் நிலை-1 அவர்கள்வசம் நிலைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவை 1)நோக்கியா கருப்பு மற்றும் ப்ரௌன் கலர் செல்போன் ஒன்று 2)வெள்ளை கருப்பு கலர் KPS என்று பொறிக்கப்பட்ட நோக்கியா செல்போன் ஒன்ற 3)மஞ்சன் கருப்பு கலர் நோக்கியா Hello city என்ற செல்போன் ஒன்று ஆகிய வழக்கு சொத்துக்களை ஆஜர்படுத்தவேண்டியிருப்பதால் முதல் விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.

எதிரிகள்தரப்பு கு.வி.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்